தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் சட்டமன்ற மேலவையில் ஐம்பத்தொன்பதாவது கூட்டத் தொடர்.

சனிக்கிழமை, 1981 மார்ச் 21.

பங்குனி 8, ரௌத்திரி 2012—திருவள்ளுவராண்டு.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கீடு.

*137 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் & செல்வி அ. லீலாவதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தனியார் கல்லூரிகளிலும், தனியார் பள்ளிகளிலும், வேலை நியமனத்தில் 18 சதவிகிதம் ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கப்படுகிறது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதேபோன்று பிற்பட்டோர் வகுப்பினருக்கும் வேலை நியமனத்தில் ஒதுக்கீடு அளிக்கப்படுமா?

(உ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) & (உ) அரசு மானியம் பெறும் சிறுபான்மையினர் அல்லாதவரால் நடத்தப்படும் தனியார் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் வேலை நியமனத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கு 50 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்யும்படி அரசு உத்தரவிட்டுள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மானியம் பெறும் சிறுபான்மையோரல்லாதார் கல்வி நிறுவனங்களுக்கு இப்படிப்பட்டதோர் ஆணை அனுப்பப்படவில்லை என்று தெரிகிறது. சிறுபான்மையோர் பள்ளிகளுக்கு மட்டும் அனுப்பப்படாததற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : என்னுடைய பதிலில் சிறுபான்மையோரல்லாதார் பள்ளிகளுக்குத்தான் இந்த அரசாணை அனுப்பப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நான் திருத்திக்கொள்கிறேன். சிறுபான்மையோரல்லாதார் பள்ளிகளுக்கு அரசு பிறப்பித்த அரசாணை பொருந்துகிறது. ஆனால் சிறுபான்மையோர் நடத்தும் பள்ளிகளுக்கு இந்த அரசாணை அனுப்பப்படவில்லை என்று தெரிகிறது. அதற்கான காரணங்களை நான் அறிந்துகொள்ளலாமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மொழி, மற்றும் மத அடிப்படையில் சிறுபான்மையினர் தங்களது விருப்பத்திற்கேற்ப கல்வி நிறுவனங்களை நிறுவி நடத்த, அரசியல் சட்டத்தின் பிரிவு 30 (1) பாதுகாப்பு அளிக்கிறது. எனவே மொழி மற்றும் மத அடிப்படையில் சிறுபான்மையினர் அல்லாதோர் நடத்தும் கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமே இந்த அரசாணை அனுப்பப்பட்டது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட வண்ணம், மொழி மற்றும் மத அடிப்படையில் கல்வி நிறுவனங்களை நிறுவி நடத்த அரசியல் சட்ட ரீதியாக உரிமை அளிக்கப் பட்டிருப்பது உண்மைதான். ஆனாலும் இத்தகைய பள்ளிகளுக்குப் பதவிகளை (Posts) அனுமதிப்பதே அரசாங்கம்தான். இந்தப் பதவிகளைப் பொறுத்தவரையில், அவைகளுக்கான முழு மானியத் தொகையையும் அரசே கொடுப்பதால், அந்த வகையில் இந்த அரசு என் அத்தகைய கல்வி நிறுவனங்களைக் கட்டுப்படுத்த முன்வரக்கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போதே, அரசு மானியம் தருகிற வகையில்தான் கட்டுப்படுத்திக்கொண்டிருக்கிறோம். என்றாலும், மொழி மற்றும் மத அடிப்படையிலான சிறுபான்மையோருக்கு இருக்கிற

1981 மார்ச் 21]

அடிப்படை அரசியல் உரிமைகள் காரணமாக அவர்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் நமக்கில்லை என்பதைத்தான் நான் இப்போது சொல்லிக் கொண்டிருக்கிறேன்.

செல்வி அ. லீலாவதி : தனியார் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் இம்மாதிரி நியமனம் செய்யாதவர்களை அரசு கட்டுப்படுத்த முடியாத நிலையில் இருக்கும்போது, இதுபோன்றதொரு அரசாணையைப் போடுவதால் என்ன பயன் ஏற்படும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தனியார் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் இத்தகைய முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு அத்தகைய நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் நமக்கு இருக்கிறது. அவர்கள் செய்யவில்லை என்றால், அரசு தருகிற மானியத்தின் மூலம் அதைக் கட்டுப்படுத்த முடியும்.

ஆனால் சிறுபான்மையோர் நடத்தும் நிறுவனங்களுக்கு இந்த உத்தரவு அனுப்பப்படவில்லை என்பதற்குக் காரணம், அவர்களுக்கு என்று சில உரிமைகள் அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு அரசியல் சட்டப்படி சில உரிமைகளை வழங்கிவிட்டு—நம்மை நாமே அந்த வகையில் கட்டுப்படுத்திக்கொண்ட பிறகு—அதற்கு மேல் சென்று தலையிடுவது சரியில்லை என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : சிறுபான்மையோர் நடத்தும் கல்வி நிறுவனங்களில் அவர்களுடைய மதத்தைச் சார்ந்தவர்களுக்கும் அல்லது அவர்களின் ஜாதியைச் சார்ந்தவர்களுக்கும் மட்டுமே உத்தியோகம் தருகிற வழக்கம்தான் இருந்து வருகிறது. நாம் இத்தகைய அரசாணையை அவர்களுக்கு அனுப்பி அவர்கள் அதை ஏற்கவில்லை என்றால், அது வேறு. ஆனால் நாமே இத்தகைய அரசாணையை அவர்களுக்கு அனுப்பவில்லை என்று சொன்னால், அவர்களுக்கு அரசியல் சட்டப்படி இத்தகைய உரிமை இருக்கிறது என்பதை நாம் நடைமுறையில் ஒப்புக்கொள்கிறோம் என்றுதானே பொருள் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அரசியல் சட்டத்தை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எனவே அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள உரிமைகளை நாம் மதித்துத்தான் உத்தரவைப் போட வேண்டும். அதற்கு முன்பே இத்தகைய உரிமையில்லை என்று நாம் கருதி போட்ட உத்தரவே செல்லுபடியாகாது என்று கோர்ட்டு தீர்ப்பளித்திருக்கிறது. ஆகவே நாம்

சட்டப்படிதான் நடந்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், நாம் வேறு எந்த அடிப்படையிலும் அணுக முடியாது.

திரு. ஆ. நல்லசிவன் : சிறுபான்மையோருக்குள்ள உரிமைகளில் இட ஒதுக்கீட்டிலும் விதிவிலக்கு இருக்க வேண்டும் என்று நீதிமன்றத் தீர்ப்பு இருக்கிறதா ? அதைப்பற்றி அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவர்கள் தங்கள் விருப்பப்படியே கல்வி நிறுவனங்களை நிறுவி நடத்தலாம் என்பதுதான் இப்போதிருக்கும் உரிமை. எனவே அவர்களுக்கு வேண்டியவர்களையே அங்கே நியமித்துக் கொள்ளும் நிலை இருக்கிறது. மற்ற தனியார் பள்ளிகளைப் பொறுத்த வரையில், வேலை தேடித்தரும் நிலையங்களில் ஆட்களைக் கேட்டுதான் நியமிக்கிறார்கள். சிறுபான்மையோர் நடத்தும் நிறுவனங்களில் அப்படி நியமிப்பதில்லை. அவர்களுக்கு அத்தகைய உரிமை இருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொண்ட பிறகு, எப்படிக் கேள்வி கேட்டாலும் நான் இதே பதிலைத்தான் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் இதில் ஆர்வமுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த உரிமையைப்பற்றிப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கிற இடங்களில், அல்லது இதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டிய இடங்களில் இதுகுறித்துப் பேசினால் நன்றாக இருக்கும்.

டாக்டர் இரா. சனார்த்தனம் : இத்தகைய அரசாணையை அமுல் படுத்தாத நிறுவனங்கள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது ? இப்படிப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகமா அல்லது குறைவா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்படிப்பட்ட அரசாணையைப் பிறப்பித்து இதை அமுல்நடத்த வேண்டுமென்று தனியார் கல்வி நிறுவனங் களுக்குச் சொல்லியிருக்கிறோம். இவ்வாறு போடப்பட்ட அரசாணைக்குக் கீழ்ப்படியாத நிறுவனம் இருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்ட சில ஷரத்துக்கள் காரணமாக சிறுபான்மையோர் நடத்தும் பள்ளிகளுக்கு சில உரிமைகள் இருப்பதால், இத்தகைய அரசாணைகளை அமுல்படுத்த முடியாத நிலை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எனவே அரசியல் சட்டத்தில்

1981 மார்ச் 21]

காணப்படும் இத்தகைய ஷரத்துக்களைப் பொறுத்தவரையில், திருத்தம் தேவை என்று மாநில அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இதைப் பொறுத்தவரையில், பொதுமக்களிடம் அனைத்துக் கட்சி மக்களும் எடுத்துச் சொல்லி ஒரு பொதுக் கருத்தை உருவாக்கிய பிறகு, இதுபோன்ற நடவடிக்கை எடுப்பது தான் நல்லதாக இருக்கும். தனிப்பட்ட முறையில் முயற்சிகளை மேற்கொள்வது சரியாக இருக்காது. இருந்தாலும் நாங்கள் முயற்சிகளை மேற்கொள்ளாமல் இல்லை. இதையொட்டிய வழக்கொன்று உச்ச நீதிமன்றத் திற்குப் போயிருக்கிறது. அதில் நமக்குச் சாதகமான தீர்ப்பு வந்தால், இனி இந்தப் பிரச்சினைக்கே இடமிருக்காது.

திரு. பா. ரா. தாமஸ் : வேலை தேடித் தரும் நிலையங்களில் தங்களின் பெயர்களைப் பதிவுசெய்து கொண்ட முன்னுரிமை உள்ளவர்களையேகூட சிறுபான்மையோர் நடத்தும் பள்ளிகளில் நியமிக்காமல் மற்றவர்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்கும் முறை இருக்கிறது. எனவே பதிவு செய்து கொண்டவர்களையே முன்னுரிமை அடிப்படையில் நியமிக்க வேண்டும் என்ற விதியை அமுல்படுத்த அரசு முன்வருமா ? அதற்காக அரசு உரிய ஆணை பிறப்பிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அத்தகைய ஆணை பிறப்பிக்கும் உரிமை அரசுக்கு இல்லை என்பதுதான் இதுவரை நான் அளித்து வந்த பதில் களிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டியதாகும். சிறுபான்மையோரைப் பொறுத்த வரையில், அவர்கள் வேலை தேடித்தரும் நிலையங்களைக் கேட்கவே வேண்டியதில்லை. அவர்களே யாரை வேண்டுமானாலும் நியமித்துக் கொள்ளலாம் என்ற நிலைதான் இருக்கிறது. அப்படி நியமிக்கப்படுபவர்களைக் கூட நல்லபடியாக நடத்த வேண்டும் என்பதுதான் நமது அரசின் விருப்பமாகும்.

தொழில் பிரிவு பாடப்புத்தகங்கள்.

*** 138 வினா.**—திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. ம. சங்கரலிங்கம் **சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேல்நிலைப் பள்ளிகளில் தொழில் பிரிவுக்குத் தகுந்த பாடப் புத்தகங்கள் கிடைக்கவில்லை என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?